செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம்
(தன்னாட்சி நிறுவனம், கல்வி அமைச்சகம், இந்திய அரசு)
செம்மொழிச் சாலை, பெரும்பாக்கம், சென்னை – 600100
CENTRAL INSTITUTE OF CLASSICAL TAMIL
(An Autonomous Institution under the Ministry of Education, Government of India)
Chemmozhi Salai, Perumbakkam, Chennai – 600100

புத்தொளிப் பயிற்சி எண்ணிக்கைகள்: 04 நாள்: **30.05.2025**

# மொழியியல் பார்வையில் தமிழ் மரபிலக்கணங்கள்

***A Linguistic Perspective of Traditional Tamil Grammars***

## புத்தொளிப் பயிற்சி வகுப்பு - 02

## (09.07.2025 - 22.07.2025)

## அறிவிப்பும் அழைப்பும்

ஒரு மொழியை அறிவியல் அடிப்படையில் அணுகி ஆராயும்முறையை மொழியியல் ஆய்வு என்பர். மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் தமிழ்மொழிக்கு இலக்கணம் வகுத்த தொல்காப்பியரின் அணுகுமுறை தற்கால மொழியியலுக்கு அடிப்படையாகும் என்பதில் ஐயமில்லை. மொழியியல் இன்று வளர்ந்துவரும் துறையாகும். மேலைநாடுகள் பலவற்றில் சிறந்த வளர்ச்சியும் பரந்தவாழ்வும் கொண்டு விளங்கி வருகிறது. இத்துறையின் கருவினைப் பண்டை இந்திய இலக்கண நூல்களிலும் கிரேக்கம், இலத்தீன் போன்ற மொழிகளின் இலக்கண நூல்களிலும் காணலாம். இந்நிலையில் மூவாயிரம் ஆண்டுகட்கு முன்னரே படைக்கப்பட்ட தமிழ்மொழி இலக்கண நூலான தொல்காப்பியத்தில் காணலாகும் மொழியியல் சார்ந்த கருத்துகளை ஆய்ந்து அறுதியிட்டு வெளிப்படுத்த வேண்டும். மேலும் தமிழ் மரபிலக்கணங்களில் கூறப்பட்டுள்ள மொழியியல் கருத்துகளை வெளிக்கொணர்வதே இப்புத்தொளிப் பயிற்சி வகுப்பின் நோக்கமாகும். தொல்காப்பியம் முதலாகப் பிறஇலக்கண நூல்களில் கூறப்பட்டிருக்கும் எழுத்து, சொல் என்னும் இரு பகுதிகளில் காணக்கிடைக்கும் இலக்கணக் கொள்கைகளை வெளிக்கொணர்வது முதன்மை நோக்கமாகும். தொல்காப்பியத்தின் பகுப்புமுறை நவீன மொழியியலாளரின் பகுப்புமுறையைப் பெரிதும் ஒத்துள்ளது எனலாம். மொழியியலாளர் ஒரு மொழிக்குரிய இலக்கணத்தை ஆராயும்போது முதலில் அதன் ஒலியன்களையும் ஒலியன்கள் புணர்ச்சியில் அடையும் மாற்றங்களையும் உருபன்களையும் தொடரமைப்பையும் பற்றி வரிசையாக விளக்குவர்.

அவ்வகையில் மரபிலக்கண நூலான தொல்காப்பியத்தில் கூறப்பட்டுள்ள மொழியியல் பாகுபாடுகளை ஒலியியல் (Phonetics), ஒலியனியல் (Phonology), எழுத்திலக்கணம் (Orthography), உருபனியல் (Morphology), தொடரியல் (Syntax),

புணரியல் (MorphoPhonemics) என்னும் அடிப்படையில் ஆராயலாம். சொற்பிறப்பியல் (Etymology), சொற்பொருளியல் (Semantics), அகராதிக்கலை (Lexicography), கோட்பாட்டு மொழியியல் (Theoretical Linguistics), ஒப்பீட்டு மொழியியல் (Comparative Linguistics), விளக்க மொழியியல் (Descriptive Linguistics), மொழியியற் குறியீட்டியல் (Linguistic typology), குறியீட்டு மொழியியல் (Semiotics), பயன்பாட்டு மொழியியல், (Applied Linguistics) வரலாற்று மொழியியல், (Historical Linguistics), சமூக மொழியியல், (Socio Linguistics) திறனாய்வுப் பேச்சுக்கூறுபாடு (Discourse Analysis), உளமொழியியல் (Psycho Linguistics), மொழிக்கற்றல் (Language Learning), கிளைமொழியியல் (Dialectology), மானிட மொழியியல், (Anthropological Linguistics) நரம்பியல் மொழியியல் (Neuro Linguistics), தடயவியல் மொழியியல் (Forensic Linguistics) மற்றும் கணினி மொழியியல் (Computational Linguistics) என நவீன மொழியியலின் பல்வேறு வகைமைகளை அடிப்படையாகக்கொண்டு மரபிலக்கணத்தை ஆய்வு செய்வதே இப்புத்தொளிப் பயிற்சி வகுப்பின் அடிப்படை நோக்கம் ஆகும்.

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம் நடத்தும் இப்புத்தொளிப் பயிற்சி வகுப்பில் பல்கலைக்கழகம் / கல்லூரி ஆசிரியர்கள் கலந்துகொண்டு பயன்பெற அழைக்கப்படுகின்றனர்.

இப்புத்தொளிப் பயிற்சி வகுப்பு **09.07.2025** முதல் **22.07.2025** வரை 14 நாட்கள் (ஞாயிற்றுக் கிழமை நீங்கலாக) நடைபெறவுள்ளது. பயிற்சி வகுப்பின் விதிமுறைகளும் விவரங்களும் கீழ்வருமாறு:

1. புத்தொளிப் பயிற்சி வகுப்பில் கலந்துகொள்ள அனுமதிக்கப்படுபவர்களின் எண்ணிக்கை – 50
2. புத்தொளிப் பயிற்சி வகுப்பு நடைபெறும் நாட்கள்: **09.07.2025** முதல் **22.07.2025** முடிய (ஞாயிற்றுக் கிழமை நீங்கலாக) 14 நாட்கள்.
3. புத்தொளிப் பயிற்சி வகுப்பு நேரம்: காலை 10.00 - 1.00 & மாலை 2.00 - 5.00.
4. புத்தொளிப் பயிற்சி வகுப்பிற்குக் கட்டணம் ஏதும் இல்லை.
5. பங்கேற்பாளர்கள் தங்குமிடத்தைத் தாங்களே ஏற்பாடு செய்துகொள்ள வேண்டும்.
6. பங்கேற்பாளர்களுக்குப் பயணப்படியும் நாட்படியும் செம்மொழி நிறுவன விதிமுறைகளின்படி வழங்கப்படும்.

7. பங்கேற்பாளர்களுக்கு மதிய உணவும் தேநீரும் நிறுவனத்தின் சார்பில் வழங்கப்படும்.
8. விண்ணப்பம் உரிய வழியாக வரப்பெற வேண்டும்.
9. இப்புத்தொளிப் பயிற்சி வகுப்பில் கலந்துகொள்ள விரும்புவோர் இதன் கீழுள்ள விண்ணப்பத்தை நிறைவுசெய்து workshopling@cict.in என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்புதல் வேண்டும். இப்புத்தொளிப் பயிற்சி வகுப்புப் பற்றிய கூடுதல் விவரங்களைத் தெரிந்துகொள்ள மேற்கண்ட மின்னஞ்சல் மூலமாகவே தொடர்புகொள்ள வேண்டும். எக்காரணத்தைக்கொண்டும் தொலைபேசி/ அலைபேசி வழியாகத் தொடர்புகொள்ளக் கூடாது.
10. நிறைவு செய்யப்பட்ட விண்ணப்பங்கள் வந்துசேர வேண்டிய இறுதி நாள் **20.06.2025** காலதாமதமாக வரும் விண்ணப்பங்கள் எக்காரணத்தைக் கொண்டும் ஏற்கப்படமாட்டா.
11. செம்மொழி நிறுவன விதிமுறைகளின்படி தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுக்கு **23.06.2025** அன்று மின்னஞ்சல்/புலனம் வழியாக மட்டும் அழைப்பாணை அனுப்பி வைக்கப்படும்.
12. இப்புத்தொளிப் பயிற்சி வகுப்பில் பங்கேற்போர் அனைத்து அமர்வுகளிலும் தொடர்ந்து கலந்துகொள்ள வேண்டும். அமர்வுக்குத் தாமதமாக வருதலைத் தவிர்த்தல் வேண்டும். தாமதமோ இடைநிற்றலோ இருப்பின் நாட்படியும் சான்றிதழும் வழங்கப்படமாட்டா.
13. செம்மொழி நிறுவன விதிமுறைகளைப் பின்பற்றிட வேண்டும்.

இயக்குநர்

**செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம், சென்னை**

# மொழியியல் பார்வையில் தமிழ் மரபிலக்கணங்கள்

## A Linguistic Perspective of Traditional Tamil Grammars

<u>புத்தொளிப் பயிற்சி வகுப்பு</u>

**(09.07.2025 – 22.07.2025)**

விண்ணப்பப் படிவம்

(Application Form)

| நிழற்படம் |
|---|

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1. | பெயர்<br>Name (in Block Letters) | தமிழ் | | | | | |
| | | ஆங்கிலம் | | | | | |
| 2. | பதவி மற்றும் துறை<br>Designation and Department | | | | | | |
| 3. | கல்வித் தகுதிகள்<br>Academic Qualifications | | | | | | |
| 4. | பல்கலைக்கழகம் / கல்லூரி / நிறுவனத்தின் பெயர் & முகவரி<br>அ) தொலைபேசி எண்<br>ஆ) மின்னஞ்சல் முகவரி<br>Name and address of the College/ University / Institution<br>a) College phone number with STD code<br>b) College e-mail ID | | | | | | |
| 5. | கல்லூரி / பல்கலைக்கழகம் / நிறுவனத்தின் வகை<br>Type of College / University / Institution (✓) | அரசு / அரசு உதவி / தன்னாட்சி / சுயநிதி Government / Government Aided / Autonomous / Self-finance | | | | | |
| 6. | பாலினம் (✓) Sex | ஆண்<br>Male | | பெண்<br>Female | | திருநங்கை<br>(Third Gender) | |
| 7. | வயது & பிறந்த நாள்<br>Age & Date of Birth | | | | | | |
| 8. | வகுப்பு *(✓)*<br>Community | பொது<br>*(G)* | | இ.பி.வ.<br>*(O.B.C.)* | | பட்டியல் இனத்தவர்<br>*(SC)* | |
| 9. | மதம்<br>Religion | | | | | | |
| 10. | சிறுபான்மையினர் தகுதிநிலை<br>Minority Status (✓) | ஆம் / இல்லை<br>Yes / No | | | | | |

| | | |
|---|---|---|
| 11. | நிரந்தர நியமனம் பெற்ற நாள்<br>Date of Permanent Appointment | |
| 12. | நிரந்தர நியமனம்பெற்ற நாளிலிருந்து ஆசிரியர் பணி அனுபவம் எத்தனை ஆண்டுகள்?<br>Total Years of Teaching Experience from the date of permanent appointment? | ஆண்டுகள்………. மாதங்கள்…………<br><br>Years…….. Months …….. |
| 13. | இல்ல முகவரி<br>(தொலைபேசி /மின்னஞ்சல் முகவரியுடன்)<br>Residential Address<br>(With Phone No & e-mail ID) | |
| 14. | புலன எண்<br>WhatsApp number | |
| 15. | செம்மொழி நிறுவனம் முந்தைய கல்வியாண்டுகளில் நடத்திய பயிலரங்குகளில் /புத்தொளிப் பயிற்சி வகுப்புகளில் கலந்துகொண்டீர்களா? ஆம் எனில் விவரம் தருக<br>Did you attend the workshop conducted by the CICT in previous academic years? If yes, please give details | ஆம் / Yes     இல்லை / No |

மேலே தரப்பட்டுள்ள விவரங்கள் சரிபார்க்கப்பட்டு உண்மையானவை என்று உறுதியளிக்கிறேன். மேலும் செம்மொழி நிறுவன விதிமுறைகளுக்கு நான் கட்டுப்படுவேன்.

(The details given above were verified and found to be correct. I will abide by the rules and regulations of the CICT)

**நாள் :** **(கையொப்பம்)**

**இடம் :**

## சான்றிதழ் (Certificate)

1. மேலே உள்ள தகவல்கள் எங்களுக்குத் தெரிந்தவரை சரியானவை என்று சான்றளிக்கப்படுகிறது.
   (Certified that the above informations is correct to the best of our knowledge)

2. பல்கலைக்கழக மானியக் குழுச் சட்டம் 1956, பிரிவு 2(f)/12Bஇன்கீழ் எங்கள் கல்லூரி / பல்கலைக்கழகம் சேர்க்கப்பட்டுள்ளது என்று சான்றளிக்கப்படுகிறது.
   (Certified that our College / University is included in the list of Colleges under Sec. 2(f)/ 12B of the UGC Act 1956)

3. விண்ணப்பதாரர் நிரந்தர / சுயநிதி ஆசிரியர் என்றும், தேர்வுசெய்யப்பட்டால் திட்டம் / பாடநெறியிலிருந்து விடுவிக்கப்படுவார் என்றும் சான்றளிக்கப்படுகிறது.
   (Certified that the applicant is a permanent / Self finance teacher and will be relieved for the Programme / Course if selected)

அலுவலகக் கண்காணிப்பாளர்
**(Office Superintendent)**

பதிவாளர் / முதல்வரின் உறுதிமொழி

(Declaration by the Registrar / Principal)

……………………………………………………………………………………………………

………………………….. (பெயர்/பதவி) அவர்களைச் செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம் 09.07.2025 முதல் 22.07.2025 வரை நடத்துகின்ற புத்தொளிப் பயிற்சி வகுப்பில் பங்கேற்க விடுவித்தனுப்புவேன் எனச் சான்றளிக்கிறேன்.

(I certify that I will relieve …………………………… …………….. ………………… …………………………… (Name/ Designation & Department) to attend the Refresher Course conducted by Central Institute of Classical Tamil from 09.07.2025 to 22.07.2025)

**உரிய முத்திரையுடன் பதிவாளர்/முதல்வரின் கையொப்பம்**

**(Signature of the Registrar/Principal with Seal)**